002

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப்பீடம்
கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (இயற்கை விஞ்ஞானம்) - 2022/2023
மட்டம் - 06
இறுதிப்பரீட்சை – 2023

**STU6313/STU6314 – சிறுவர் உரிமைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 24.11.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் அத்துடன் பகுதி **II** இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி – I

1. சிறுவர்கள் தனிப்பட்ட உரிமைகளை கொண்டிருப்பது ஏன் முக்கியமானதாக உள்ளது. சுருக்கமாக விளக்குக.
2. இலங்கை அரசாங்கத்தினால் சிறுவர்களுக்கான சாசனம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதன் நோக்கம் என்ன என்பதை சுருக்கமாக விவரிக்குக.
3. பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் சிறுவர்களின் நலன்புரி தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டு (02) செயற்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக.
4. சிறுவர் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் மாநாட்டிற்கிணங்க பாதுகாக்கப்பட வேண்டிய சிறுவர் பிரிவினர் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.
5. இலங்கை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தொழிற்பாடுகள் நான்கினைக் (04) குறிப்பிடுக.
6. சிறுவர் உரிமைகளை நிர்வகிக்கும் அடிப்படை கொள்கைகள் மூன்றினைப் (03) பெயரிடுக.
7. இலங்கையில் வீதியோர சிறுவர்களின் நிலையினை விருத்தி செய்வதற்கு பின்பற்றக் கூடிய உத்திகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.
8. ஒரு விஞ்ஞான மற்றும் கணித பாட ஆசிரியராக கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறையில் சிறுவர்களின் பங்குபற்றல் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இரண்டினைச் (02) சுருக்கமாக குறிப்பிடுக. **(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.
   - **i.** உயிர் வாழ்வதற்கான உரிமை என்பதனால் கருதப்படுவது யாது என்பதனைச் சுருக்கமாக விளக்குக. **(02 புள்ளிகள்)**
   - **ii.** அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இனங்காணக் கூடிய சிறுவர்களின் உயிர்வாழ்தல் உரிமை மீறலிற்கான எடுத்துக்காட்டுக்கள் நான்கினை (04) குறிப்பிடுக. **(08 புள்ளிகள்)**
   - **iii.** சிறுவர்களின் உயிர்வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு பாடசாலை சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் இரண்டினை (02) உதாரணங்களுடன் விளக்குக. **(10 புள்ளிகள்)**

10.
   - **i.** வளர்ச்சி மற்றும் விருத்தி ஆகிய எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**
   - **ii.** "பூரண விருத்திக்கான அடிப்படை ஆரோக்கியம் மற்றும் உடல் விருத்தியாகும்"
     இலங்கையில் தற்போதுள்ள சமூக சூழ்நிலையில் வளர்ச்சி மற்றும் விருத்திக்கான உரிமைகள் மீறப்படும் இரண்டு (02) சூழ்நிலைகளை சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

iii. மேலே நீர் கூறிய சூழ்நிலைகளை குறைப்பதற்கு ஒரு நாடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நான்கினைச் (04) சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

11.

i. விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகள் எனப்படுவோர் யார்? **(03 புள்ளிகள்)**

ii. விசேட தேவைகளுடன் கூடிய சிறுவர்களை பாதுகாக்கவும் அத்துடன் ஆதரவு வழங்கவும் பாடசாலையினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மூன்றினைக் (03) குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

iii. விசேட தேவைகளுடன் கூடிய சிறுவர்களின் சமூகமயமாக்கலில் பெற்றோரின் வகிபங்கை மூன்று (03) விடயங்களை குறிப்பிட்டு சுருக்கமாக விவரிக்குக. **(06 புள்ளிகள்)**

iv. விசேட தேவைகளுடன் கூடிய சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் இரண்டினைச் (02) சுருக்கமாக விவரிக்குக. **(05 புள்ளிகள்)**

12.

i. "தற்போது பாடசாலை சிறுவர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாதல் ஒரு பலம்மிக்க சமூக பிரச்சினையாக மாறியுள்ளது" இக்கூற்றை நியாயப்படுத்துக. **(04 புள்ளிகள்)**

ii. போதைப் பொருள் பாவனையின் பாதக விளைவுகளை பற்றி சமூகம் அத்துடன் பாடசாலை சிறுவர்களுக்கு கல்வியறிவூட்டுவதில் ஒரு முறைசார் நிறுவனமாக பாடசாலையினால் முன்னெடுக்கப்படக் கூடிய உத்திகள் நான்கினைக் (04) குறிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

iii. இளம் பிரிவினர் மத்தியில் போதைப்பொருள் பாவனைக்கு ஆட்படுதலை தடுப்பதில் பெற்றோர்கள் எவ்வாறு உள்வாங்க முடியும் என்பதை இரண்டு (02) உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக. **(08 புள்ளிகள்)**

13.

i. சிறுவர் துஸ்பிரயோகத்தின் நான்கு (04) வடிவங்களை பெயரிடுக. **(04 புள்ளிகள்)**

ii. இன்றைய சமூகத்தில் இனங்காணக்கூடிய சிறுவர் துஸ்பிரயோகத்திற்கான காரணங்கள் மூன்றினை (03) சுருக்கமாக விவரிக்குக. **(06 புள்ளிகள்)**

iii. இலங்கையில் சிறுவர் துஸ்பிரயோத்தை தடுப்பதன் தோல்விக்கு பங்கு வகிக்கும் இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விவரிக்குக. **(05 புள்ளிகள்)**

iv. சிறுவர் துஸ்பிரயோகத்திலிருந்து மாணவர்கள் மற்றும் பெற்றோர் தம்மை தாமாகவே பாதகாத்துக் கொள்வதற்கு பாடசாலைகளினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் இரண்டினை (02) விளக்குக. **(05 புள்ளிகள்)**

பகுதி – **II 20 x 03 = 60** புள்ளிகள்

மொத்தம் = 100 புள்ளிகள்

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -